# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (05.11.2022முதல் 09.11.2022 )

**அறிக்கைஎண் 088/2022** **தேதி.0411.2022**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 24°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 01.11.22 முதல் 03.11.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 66 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (01.11.2022 முதல் 03.11.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 09.11..2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01/11 | 02/11 | 03/11 | தேதி | நாள்-1 05/11 | நாள்-2 06/11 | நாள்-3 07/11 | நாள்-4 08/11 | நாள்-5 09/11 |
| 0.0 | 2.4 | 6.8 | மழை (மி.மீ) | 20 | 20 | 15 | 8 | 6 |
| 32 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 28 | 30 | 30 | 30 |
| 23 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 21 | 21 | 20 | 20 |
| 7 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 7 | 6 | 6 | 4 |
| 85 | 85 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 80 | 80 | 80 |
| 67 | 90 | 66 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 65 | 65 | 55 |
| 14 | 8 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 4 | 4 | 4 | 4 | 4 |
| 90 | 50 | 90 | காற்றுவீசும் திசை | 90 | 90 | 70 | 50 | 50 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (05.11.2022 முதல் 09.11.2022)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலானமேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 05-11-2022 | 17.0 | 20.0 | 22.0 | 16.0 | 18.0 | 26.0 | 17.0 | 18.0 | 18.0 | 17.0 | 26.0 | 17.0 | 15.0 |
| 06-11-2022 | 17.0 | 17.0 | 19.0 | 15.0 | 17.0 | 21.0 | 14.0 | 17.0 | 17.0 | 17.0 | 22.0 | 17.0 | 13.0 |
| 07-11-2022 | 12.0 | 12.0 | 13.0 | 11.0 | 12.0 | 16.0 | 11.0 | 12.0 | 12.0 | 12.0 | 15.0 | 12.0 | 10.0 |
| 08-11-2022 | 5.0 | 5.0 | 6.0 | 5.0 | 5.0 | 6.0 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 | 6.0 | 5.0 | 5.0 |
| 09-11-2022 | 3.0 | 1.0 | 2.0 | 1.0 | 2.0 | 1.0 | 0.0 | 3.0 | 3.0 | 3.0 | 2.0 | 3.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| **பொதுஅறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கன மழையுடன் காற்றின் வேகம் 4 - 6 கி.மீவரை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை குறைவாக நிலவ வாய்ப்புள்ளது. பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் உரமிடல் மற்றும் மருந்து தெளித்தலை தவிர்க்கவும். |
|---|---|---|
| கொடிவகை காய்கறிகள் | பூக்கும் பருவம் | தொடர் மழையினால் பூக்கும் பருவத்தில் உள்ள கொடிவகை காய்கறிகளில் அதிக தழை வளர்ச்சி காணப்படும். இதனால் பூ பிடித்தலை அதிகரிக்க எத்திரல் என்ற வளர்ச்சி ஊக்கியை பீர்க்கங்காய் தவிர மற்ற எல்லா கொடிவகைப் பயிர்களுக்கும் தெளிக்கவும். இதை மழையில்லா நாட்களில் இரண்டு முறை ஒருவார இடைவெளியில் தெளிக்கவும். |
| மாமரம் | | கடந்த வாரம் வரையிலானதொடர் மழையினால் மாமரத்தின் அதிக தழை வளர்ச்சியை கட்டுப்படுத்த ஒரு சதம் பொட்டாசியம் நைட்ரேட் அல்லது பேக்குளோபூட்ரசேல் என்ற மருந்தை ஒரு மரத்திற்கு 10 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |
| கால்நடைகள் | | மழை காலங்களில் கோமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் அதற்கு தடுப்பூசி போடவும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை கூடாரங்களில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவும்.<br>உலர்தீவனங்களை மழையில் நனையாதவாறு பார்த்துக் கொள்ளவும் |

**குறுஞ்செய்தி**

- மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**